# வள்ளலார் விழியே





சிவ செல்வராஜ்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி



ஆன்மீக செம்மல்

## ஞானசற்குரு சிவசெல்வராஜ்


**தங்கஜோதி ஞான சபை அறக்கட்டளை**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

**17-49, P, கலைஞர் குடியிருப்பு,**

**கன்னியாகுமரி - 629 702**

**www.vallalyaar.com**

**Cell : 9245153454**

# சிவசெல்வராஜ் எழுதிய "கண்மணிமாலை" யை வாழ்த்திய வள்ளல் பெருமான்!

1992-ல் வள்ளல் பெருமான் அடியேனை "கண்மணிமாலை" என்னும் ஞான நூலை எழுத வைத்தார்! காலங்காலமாக எல்லோராலும் மறைத்து இரகசியமாக கருதப்பட்ட ஞானத்தை கண்மணிமாலையில் வெட்ட வெளிச்சமாக எழுதி வெளியிட வைத்தார் வள்ளல் பெருமான்! இது ஓர் ஆன்மீக புரட்சி என்றே கூறுவேன்! இன்றும் எம்மைப் போன்று வெளிப்படையாக சொல்வார் யாருமில்லை! வள்ளலார் கொடுத்த ஊக்கம் அடியேனுக்கு!

150 ஆண்டுக்கு பிறகு "கண்மணிமாலை" என்றொரு நூல்வரும் என கருதி வள்ளல் பெருமான் அன்றே திருவருட்பாவில் ஒரு கவி பாடியுள்ளார்! இது யான் பெற்ற பெரும் பாக்கியம்! இந்த பிறவியே புனிதம் அடைந்ததாக கருதுகிறேன்!

"கண்மணிமாலை"யின் பெருமையை வள்ளல் பெருமானே போற்றுகின்றாரெனில் அதை எழுதத் தூண்டி - எமக்கு அருள் புரிந்த அருள் வள்ளல் ஞானவள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்! அவர் செய்த பணியை எம்மை செய்ய வைத்துள்ளார்! அவர் இட்டபணியை செய்வதேயாம் செய்யும் காட்டும் நன்றியாக கருதுகிறேன்!

திருவருட்பா இரண்டாம் திருமுறை - திருச்சாதனத் தெய்வத்திறம் - 2வது பாடல்

கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
**கண்மணிமா லைக்**கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்.

வேணும் சுபம்

# ஞான சற்குரு சிவசெல்வராஜ் அருளிய 28 நூற்கள்

| | |
|---|---|
| ஆன்மீகப் புரட்சி ஆரம்பம் | கண்மணி மாலை |
| ஆன்மீக தெளிவு அளித்தது | அருள்மணி மாலை |
| ஆன்மா உணர்த்திய அன்னைக்கு | ஸ்ரீபகவதி அந்தாதி |
| ஆன்ம நேயத்துக்கு ஒரு | அருட்பெருஞ்ஜோதி அந்தாதி |
| சன்மார்க்க நெறியை அறிய | சன்மார்க்க தெய்வம் |
| சன்மார்க்க நெறி நின்ற சற்குரு | கோவிந்த சுவாமிகள் |
| சன்மார்க்க குருக்களுக்கு சாற்றினேன் | அஷ்டமணி மாலை |
| சன்மார்க்கி இவன்என சாற்றுமே | செல்வமே சீர் தாருமே |
| ஞானம் அருள்வான் ஞான பண்டிதன் | செந்திலாண்டவன் பாமாலை |
| ஞானம் வேண்டின் ஞாலம் உணர | அன்பு உதய மலர் |
| ஞானம் தருவார் ஞானவள்ளல் | வள்ளலார் விழியே |
| ஞானம் பூரணமாக ஞான நூல் | ஜோதிமணி மாலை |
| சித்தம் தெளிந்த சித்தர்களுக்கு | ஜோதி ஐக்கூ அந்தாதி |
| சித்தர் இவரும் சிறந்தவரே | சற்குரு ஜக்கி வாசுதேவ் |
| சித்தர் இவர் சிறப்பு சீரியதே | சத்திய சாயி பாபா |
| சித்தர் வழியில் சிவசெல்வராஜ் | சனாதன தர்மம் |
| சனாதன தர்மம் உரைப்பது | வள்ளல் யார் |
| சனாதன தர்ம நெறி வழியில் | இயேசு எழுபது |
| சனாதன தர்மம் இதுவே | ஞானக்கடல் பீர்முஹம்மது |
| சனாதனதர்மமே சன்மார்க்கம் | திருவருட்பா மெய்ஞான உரை (4 பாகங்கள்) |
| மரணமிலா பெருவாழ்வுக்கு | சாகாக்கல்வி |
| ஆன்மீக நிலை உணர | மந்திரமணி மாலை |
| வள்ளலார் அருளியது | திருவருட்பா தேன் |
| ஆன்மாவை அறிய | அகர உகர மாலை |
| ஞானம் தருவது | ஞான மணி மாலை |


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.
அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்ஜோதி!
அருட்பெருஞ்ஜோதி!
பசித்திரு
தனித்திரு
விழித்திரு
ஜீவகாருண்யமே
மோட்ச வீட்டின்
திறவுகோல்
திரு அருட்பிரகாச வள்ளல்
இராமலிங்க சுவாமிகளின் திருவடிப் போற்றி!

# வள்ளலார் விழியே





அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் விழியே

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களால் 1865-ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன் என்று கூறிய ஞானி. இன்றும் உலகெங்குமுள்ள எல்லா சன்மார்க்க சங்கங்களையும் வள்ளலாரே அருபமாக இருந்து இயக்குகின்றார். இதனை எண்ணற்ற சன்மார்க்கிகள் உணர்ந்துள்ளனர்.

அன்னதானம் செய்து பசிப்பிணியை போக்குவதையே ஏராளமான வள்ளலார் அன்பர்கள் தங்கள் தலையாய கடமையாக செய்து வருகின்றனர். வாழ்க! அவர்கள் ஒப்பற்ற பணி வளர்க!

1872-ஆம் வருடம் வள்ளல் பெருமானால் ஆரம்பிக்கப் பட்டதே "சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை" ஆகும். புறவினத்தாராக இருப்பவர்களை ஞானப் பாதைக்கு அழைத்து வந்து இறை உண்மை விளக்கம் கொடுத்து, ஈடுபடச் செய்து, வள்ளலார் வழியில் நடக்கச் செய்வதே, வள்ளலார் காட்டிய விழி வழியில் பீடுநடை போடச் செய்வதே, அவர்களை அகவினத்தார் ஆக்குவதே எமது ஒரே பணி.

எமது 25 வருட ஆன்மீக வாழ்வில் எழுதி வெளியிடப் போவது 25 ஞானநூற்கள். 22 நூற்கள் தயாராகி விட்டது. இன்னும் 3 நூற்கள் வெகுவிரைவில் தயாராகிவிடும். வள்ளல் பெருமான் அருள்புரிகிறார்.

வள்ளலார் விழி வழியே செயல்படும் எமது பணிக்கு வள்ளலாரே காப்பு. அவர்தான் நடத்துகின்றார். இந்நூல் முழுமையும் அவர் வரலாற்றுடன் ஞானம் பரவிக் கிடக்கின்றது. படித்து உணர்ந்து அனுபவப்பட வாருங்கள். உபதேசம் தீட்சை பெற்று மரணமிலா பெருவாழ்வு வாழுங்கள்.



அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ் ஜோதி

# திருவருட் பிரகாச வள்ளலார்

## இராமலிங்க சுவாமிகள் நல்வாழ்க்கை சரிதச் சுருக்கம் (வரலாறு)

நமது பாரதநாடு ஆன்மீக ஞானத்துக்கும் புகழ் பெற்றது. நமது தமிழகமோ தொன்றுதொட்டுத் தெய்வமும் தேவர்களும் மகிழ்ந்து விளையாடிய பூமி. தமிழ் மண்ணில் தோன்றிய முனிவர்களும், மகான்களும், யோகிகளும், சித்தர்களும் கணக்கில் அடங்கா. தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களும் திருக்குளங்களும் தமிழர்களின் தெய்வ சிந்தையைப் பறைசாற்றுகின்றது.

தமிழகத்தின் பண்பாட்டில் விருந்தோம்பல் ஒரு தலையாய பகுதி. நமது பாரதநாடு பழமையானது. நீண்ட நெடுங்காலமாக உலகத்துக்கு செந்நெறி காட்டி வருவது. ஆன்மீக வலிமையால் காலத்தை வென்று வாழ்வது. இந்த புண்ணிய பூமியாம் இந்தியாவில் நாமும் பிறந்ததை எண்ணி பெருமைப்படுவோமாக!

நமது ஆன்மீக செல்வர்கள் காட்டிய அறவழி நடந்து நாமும் மேன்மையடைவோமாக!

ஞான பூமியாம் நமது பாரத நாட்டில் தென் கோடியில் அமைந்த தமிழகத்தில் தென்னார்காடு மாவட்டம் சிதம்பரம் ஊருக்கு அருகில் மருதூர் என்னும் சிற்றூரில் இராமையா-சின்னம்மை என்னும் இறையருள் பெற்ற தம்பதிகளுக்கு 5-10-1823-இல் ஐந்தாவது குழந்தையாக இராமலிங்க சுவாமிகள் பிறந்தார். 5 மாத கைக்குழந்தையாக இருந்த போது பெற்றோருடன் பஞ்சபூத தலத்தில் ஆகாய தத்துவத்தை விளக்கும் தலமாக விளங்கும் சிதம்பரம் சென்று தில்லை நடராச பெருமாள் அருளால் “உண்மை” அறியப் பெற்றார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தார்.

மூத்த சகோதரர் சபாபதியின் பராமரிப்பில் சென்னையில் குடியேறி வளர்ந்து வந்தார். 5 வயதான போது தமையனார் சேர்த்த குருவிடம் பாடம் கேட்காமல் பக்கத்தில் உள்ள கந்தசாமி கோவிலுக்கு சென்று வழிபடுவதையே வழக்கமாகக் கொண்டார். இதையறிந்த தமையனார் இராமலிங்கம் படிக்காமல் ஊர் சுற்றுவதாக தவறாக எண்ணி கண்டித்தார். அண்ணியின் அன்பால் தாய்பாசத்தால், அவர்கள் மனம் நோகலாகாது எனக் கருதி வீட்டிலேயே இருந்து படிப்பதாக கூறினார். அவ்வீட்டின் மேல்மாடியில் ஒரு தனியறையில் ஒரு நிலைக் கண்ணாடியும் அதன் முன் குத்துவிளக்கேற்றி வைத்தும் அதனை

பார்த்தபடி முருகப் பெருமானை தியானித்து பரம்பொருளைப் பற்றிய பாடத்தைப் படித்தார். அப்போது இராமலிங்கருக்கு வயது 9. முருகப் பெருமானை கண்ணாடியில் கண்டார். ஏடு இல்லாமல் எழுத்து இல்லாமல் கலை ஞானங்கள் எல்லாம் ஓதாது உணரப்பெற்றார்.

ஒருநாள் தமையனார் போகமுடியாத ஒரு பக்தி பிரசங்கத்திற்கு இராமலிங்கர் சென்று ஊரே வியக்கும்படி பெரிய புராணம் சம்பந்தர் வரலாறு ஒரு பாடலின் 2 வரிக்கு மட்டும் நீண்ட நேரம் விளக்கம் கொடுத்து பேசினார்.இதுவே இராமலிங்கத்தை ஊறியச்செய்த முதல் நிகழ்ச்சி. அதன்பிறகு பலநாள் உரையாற்றினார். மக்கள்அவரது உரையைக் கேட்டு மெய் மறந்தனர். பின்னர் இராமலிங்கர் புகழ் சென்னை முழுவ்தும் பரவலாயிற்று. பக்கத்து ஊர்களிலிருந்தும் திரளான மக்கள் வந்தனர்.

இந்நிலையில் இராமலிங்கர் திருவொற்றியூர் தியாகராச பெருமானை வணங்கி வழிபடலானார். வடிவுடை மாணிக்க அம்மையார் ஒரு நாள் அண்ணியார் உருவில் வந்து உணவு கொடுத்தார். சிவபெருமானார் பல முறை அருள் பாலித்திருக்கிறார். இறைவனால் ஆட்கொள்ளபட்டு இறைவனால் வளர்க்கப்பட்டார் இராமலிங்கர்.

நகர்புற ஆரவாரம் பிடிக்காமல் சிறிய ஊர் புறங்களை நாடிச் சென்றார். சிற்றூர்களிலே பலர் சிறு தெய்வ வழிபாடு செய்து உயிர் பலி கொடுத்து பூஜை செய்யும் கொடுஞ்செயலைக் கண்டு துடித்தார். வேதனையால் மனம் குமுறினார். உயிர்ப்பலி கூடவே கூடாது என எல்லாருக்கும் உரைத்தார். இறைவனை தூய்மையான அன்பு மனம் ஒன்றாலே வழிபாடு செய்யுங்கள் என்றார்.

இராமலிங்கர் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர் அனைவராலும் பாராட்டப்பட்டார். பற்பல கவிதைகள் இயற்றினார், உரைநடை நூற்கள் இயற்றினார். பெரும் புலவர்களின் சந்தேகங்களை நிவர்த்தித்தார். இராமலிங்கரிடம் பற்பல அறிஞர்களும் சீடர்களாகி பாடம் கேட்டு தெளிந்தனர்.

இராமலிங்கரை அவரது உறவினர்கள் மிகவும் வற்புறுத்தி திருமணத்தில் சற்றும் விருப்பம் இல்லாமல் இருந்தவருக்கு மணமுடித்து வைத்தனர். ஆனால் மணவாழ்வில் நாட்டம் கொள்ளாமல் மனைவிக்கு திருவாசகத்தின் பெருமையை உணர்த்திவிட்டு இல்வாழ்வை துறந்து விட்டார்.

இராமலிங்கர் முற்றிலுமாக ஆண்டவரிடம் தம்மை ஒப்படைத்து விட்டார்கள். எந்நேரமும் பக்தர்களுடனும் அன்பர்களுடனும் இறைவன் திருவருளை பாடி, புகழ்ந்து, பேசி களித்திருந்தனர். பின்னர் சிதம்பரம் சென்றார். தில்லை நடராசனை விட்டு பிரிய மனமில்லாமல் சிலகாலம் அங்கேயே போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

பக்கத்து ஊர்களுக்கெல்லாம் சென்று பாடி பரவசம் அடைந்தார். "கருங்குழி" என்னும் ஊர் இராமலிங்க சுவாமிக்கு மிகவும் பிடித்து விட்டது. அங்கு அன்பர் ஒருவர் வீட்டில் இருந்து எல்லா இடங்களுக்கும் சென்று வந்து கொண்டிருந்தார். சுமார் 15 வருடம் அங்கே இருந்தார்கள். இந்நாட்களில் பற்பல அருட்பாக்களைப் பாடி அருளினார். பற்பல அற்புதங்கள் நிகழ்ந்தன. தண்ணீரால் விளக்கு எரிந்ததும் இங்குதான். பலர் சுவாமிகளை நாடி நோய் நீங்கினர். உள்ள நோயும் நீங்கப் பெற்றவர்கள் ஏராளம் அருளாட்சி புரிந்தார்கள் அங்கு.

பற்பல கலைஞானமும் இறைவன் அருளால் கைவரப் பெற்ற இராமலிங்கசுவாமிகள் பற்பல யோக நிலைகளையும் கடந்தார். எல்லாம் வல்ல இறைவன் தம் அன்பு பிள்ளையாகிய இராமலிங்கத்துக்கு எல்லா நலனும் பெரும் பேற்றையும் அருளினார். இராமலிங்க சுவாமிகள் சித்தர்களுக்கெல்லாம் பெரும் சித்தராக விளங்கினார். ஏனைய சந்நியாசி களைப்போல காவி உடை தரிக்காமல் தூய வெள்ளாடையால் உடல் முழுவதும் மூடி நடந்தார். வெள்ளாடைத்துறவி என்றே மக்கள் அழைத்தனர்.

மக்கள் துன்பம் காண சகியாமல் ஆண்டவரிடம் மன்றாடினார். மக்களின் பெருந்துன்பமாகிய பசியை போக்கிட எண்ணி இறைவன் கட்டளையால் சத்திய தர்ம சாலையை நிறுவினார். வந்தவர்க்கெல்லாம் அன்னம் வழங்க ஆவன செய்தார்கள். வடலூரில் தர்ம சாலையை நிறுவிய இராமலிங்கசுவாமிகள் ஆன்ம பசியை நீக்கிட சத்திய ஞான சபையையும் வடலூரில் ஏற்படுத்தினார்கள். அதை உடலின் தலை அமைப்பைப்போல் செய்து உண்மை விளக்கம் தந்தார்கள்.

இக்காலத்தில் சுவாமிகள் மேட்டுக்குப்பம் ஊரில் சித்தி வளாகம் இல்லத்தில் தங்கி இருந்தார்கள். சத்திய ஞானசபையில் ஒரு நிலைக் கண்ணாடியும் ஓர் அகல் விளக்கையும் பிரதிட்டை செய்தார்கள். அதற்கு முன் ஏழு திரைகள் அமைத்து வைத்தார்கள். இறைவனை அடைய தத்துவ விளக்கமாக இதை ஸ்தாபித்தார்கள். தைப்பூசத்தன்று ஜோதி தரிசனம் காண வாருங்கள் என மக்களை கூவி அழைத்தார். 7 திரைகள் ஒவ்வொன்றாக நீங்க பின் அகண்ட ஜோதி வடிவில் இறைவனை மக்கள் கண்டார்கள். இன்றும் தைப்பூசத்தன்று வடலூரில் நாமும் காணலாம்.

சத்திய தர்ம சாலையிலும், சத்திய ஞான சபையிலும் சித்தி வளாகத்திலும் திருவருட் பிரகாச வள்ளல் என பக்தர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட இராமலிங்க சுவாமிகள் அருளுரைகள் பல புரிந்து மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டினார்கள். பற்பல அற்புதங்கள் புரிந்தார். மக்கள் குறை நீக்கி நல்வழிப்படுத்தி அருளாட்சி புரிந்தார். சுவாமிகளிடம் வந்து துயர் நீங்கி இன்பம் அடைந்தவர்கள் கணக்கில் அடங்காது. எல்லோருக்கும் இனியவராய் பெரும் ஞானியாய் விளங்கினார்கள்.

எத்தனையோ மகான்கள் ஞானிகள் இம்மண்ணில் தோன்றிய போதும் இராமலிங்கசுவாமிகளின் அருட்கொடையைப்போல் உள்ளார் இல்லை எனலாம். சித்தர்களுக்கெல்லாம் பெரும் சித்தர், ஞானிகளுக்கெல்லாம் தலையாயவர், பக்தர்களில் சிறந்தவர். எல்லா கலை ஞானமும் பெற்றுத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல் எல்லாரும் எல்லாமும் பெற சதாகாலமும் எல்லாம் வல்ல அருட் பெருஞ்சோதி ஆண்டவரிடம் மன்றாடினார்.

மக்கள் மரணமிலா பெருவாழ்வு அடையும் பொருட்டு சன்மார்க்க நெறியை காட்டினார். ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தினார். "காயமே இது பொய்யடா" என்ற சொல்லை மாற்றி, இந்த உடம்புக்கு மெய் என்று பெயர் சொல்லப்படுவதன் காரணம் இந்த உடம்பு அழியாத தன்மையுடையதாய் மாற்றி அமைக்க முடியும் என்றும் அதனால்தான் இதற்கு "மெய்" என பெயரிட்டார் சான்றோர்கள் என உலகிற்கு ஆணித்தரமாய் சுட்டிக் காட்டினார்கள்.

எத்தனையோ மந்திரங்கள் இருந்தாலும் ஆண்டவனின் தன்மையை அருளை சுட்டும் மந்திரமாக சன்மார்க்க சங்கம் தழைக்க ஆண்டவனே இராமலிங்க சுவாமிகளுக்கு அறிவுறுத்திய மந்திரமே

"அருட் பெருஞ்சோதி அருட் பெருஞ்சோதி
தனிப் பெருங்கருணை அருட் பெருஞ்சோதி" என்பதாகும். இதை நாமெல்லாம் நாளெல்லாம் இடைவிடாது சிந்தித்து கருத்துடன் ஜெபித்து வந்தால் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளை அடைவோம். இது உறுதி என இராமலிங்க சுவாமிகள் வலியுறுத்து கிறார்கள்.

எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் தன்மை நாம் அடைய வேண்டும் என்கிறார். மனம் உருகி, அமைதியாக அமர்ந்து அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரை மனதில் நினைத்து வழிபட வேண்டும் என கூறுகிறார்.

இராமலிங்க சுவாமிகள் மிகச் சிறந்த சமுதாய சீர்திருத்தவாதி யாகவும் விளங்கினார். மூட நம்பிக்கைகளை போக்கி மக்கள் நல்வழி நடக்க பற்பல அறிவுரை பகன்றார்கள். கடவுள் ஒருவரே என்றும் அவரை ஜோதிவடிவில் நாம் வழிபடலாம் என்றும் அவரை அடைய ஆன்மநேயம் ஒன்றே வழி எனவும் அறுதியிட்டு கூறுகிறார்கள்.

முதன் முதலாக திருக்குறள் வகுப்பு நடத்தி திருக்குறள் பெருமையை மக்களுக்கு எடுத்தியம்பினார்கள்.

முதன் முதலாக மெய்ப்பொருளை விளக்க உரைநடை நூல் எழுதி யருளினார்கள். முதன் முதலாக கல்வியறிவில்லாத முதியோர்களுக்கு கல்வி கற்பிக்க வடலூரில் முதியோர் கல்வி நிலையம் ஸ்தாபித்தார்கள்.

முதன் முதலாக சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்தி எல்லோரும் படிக்க வழிகாட்டினார்கள்.

உலகத்திலுள்ள அனைத்து சாத்திரங்களிலும் தலையாய சாத்திரமான திருமூலர் அருளிய "திருமந்திரம்" பற்றி மக்களுக்கு கூறி அதன் பெருமையை உணர்த்தியருளினார்கள்.

உலகத்திலுள்ள அனைத்து தோத்திர நூல்களிலும் தலையாய தோத்திர நூலான மாணிக்கவாசகர் அருளிய "திருவாசகம்" நூலை தம் வாழ்நாள் முழுவதும் கையிலேயே வைத்திருந்து பாடி பரவசமடைந்து அதன் பெருமையை மக்களுக்கு எப்போதும் அறிவுறுத்தியருளினார்கள்.

சாத்திரத்தில் சிறந்த திருமந்திரத்தையும், தோத்திரத்தில் சிறந்த திருவாசகத்தையும் பாடிப் பாடிப் பரவசமடைந்த திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாத்திரத்தில் சிறந்த "திருவருட்பாவை" நாம் உய்யும் பொருட்டு அருளியிருக்கிறார்கள். "பா" திறத்தில் மிக மிக சிறந்து விளங்குவது திருவருட்பா என்றால் மிகையாகாது! ஆண்டவன் இருக்கும் சற்பாத்திரம் பற்றிய உண்மையை வெட்ட வெளியாக, மெய்ப்பொருளை சுட்டிக்காட்டும் மிகமிகச் சிறந்த நூலாக திருவருட்பா விளங்குகிறது என்றால் அதுவும் மிகையாகாது!! "கண் உள்ளவர் கண்டு" கொள்வர். "கருத்து" உள்ளவர் "உணர்ந்து" கொள்வர். இறைவன் அருள்வார்.

இராமலிங்க சுவாமிகள் பெருமையை சொல்லப்போனால் சொல்லிக் கொண்டே போகலாம். அவை கணக்கிலடங்காதவை இக்கலியுகத்தில் கடைசியாக நாம் அறிந்த பேரருளாளர் நமது திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்.

இராமலிங்க சுவாமிகள் உலகிற்கு கொடுத்த அருட்கொடைகள் ஐந்து

1. சன்மார்க்கசங்கம் (1865)
2. சத்திய தருமசாலை (1867)
3. சத்தியஞான சபை (1872)
4. சித்தி வளாகம் (1870)
5. திருவருட்பா (ஆறு திருமுறைகள்)

சன்மார்க்க சங்கத்தின் குறிக்கோள் ஆன்மநேய ஒருமைப்பாடு

சத்திய தர்மச்சாலையின் குறிக்கோள் ஜீவகாருண்ய ஒழுக்கம்

சத்திய ஞானசபையின் குறிக்கோள் ஜோதிதரிசனம்

சித்திவளாகத்தின் குறிக்கோள் மரணமிலா பெருவாழ்வு

திருவருட்பாவின் குறிக்கோள் மேற்கூறிய நான்குமே

முதல் நான்கும் நிறுவனங்கள் ஐந்தாவது நூல் முதல் நான்கும் கற்கோயில்கள். ஐந்தாவது சொற்கோயில் கற்கோயில் கட்டினவர்கள் சொற்கோயில் கட்டவில்லை. சொற்கோயில் கட்டினவர்கள் கற்கோயில்

கட்டவில்லை. நம் வள்ளல் பெருமானே கற்கோயில் சொற்கோயில் ஆகிய இரண்டையுமே உருவாக்கி தந்துள்ளார்கள். சன்மார்க்க உலகின் பஞ்சபூதங்களென திகழும் இவ்வைந்தையும் நாம் நன்கு பயன்படுத்தி பேரின்ப நிலை அடைவோமாக!

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் என்று நாம் தமிழின் தொன்மையை, பெருமையை பேசினாலும் அதன் உண்மையை, தத்துவத்தை முதன் முதலாக "தமிழ்" என்னும் தனிக் கட்டுரை எழுதி உலகெலாம் தமிழின் பெருமையை உணர்த்திக் காட்டிய பெருந்தகை இராமலிங்க சுவாமிகளே.

தமிழனாய் பிறந்த ஒவ்வொருவரும் போற்றி, வணங்கி பாராட்டப்பட வேண்டியவர் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களே.

உலகத்து மொழிகளிளெல்லாம் தலை சிறந்தது தமிழ். ஏனென்றால் நாம் அடைய வேண்டிய மேலான மரணமிலா பெருவாழ்விற்கு அதிவிரைவில் நம்மை இட்டுச்சென்று சுத்த சிவானுபூதியை வழங்கவல்லது தமிழ்தான் என்று உணர்த்தி, தம்மில் அழுந்தி இருப்பதால் இது தமிழ் என்றும் அருளியிருக்கிறார்கள்.

இராமலிங்க சுவாமிகள் வலியுறுத்திய கொள்கைகளை வைத்துத்தான் நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் வாழ்ந்து காட்டி நமது அடிமைத் தளையை நீக்கி நம் பாரதநாடு சுதந்திரம் அடைய வழிவகுத் தார்கள் என சிலம்புச் செல்வர் மா.பொ.சி. அவர்கள் தாம் எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் நூலிலே தெளிவு படுத்தியி ருக்கிறார்கள். இந்நூலுக்கு மிகச்சிறந்த இந்திய அரசு பரிசான சாகித்திய அகடாமி பரிசு கிடைத்திருக்கிறது மிகவும் மகிழ்ச்சியான விஷயம்.

"வாழையடி வாழை என வந்தத் திருக்கூட்ட மரபினில் யான் ஒருவனன்றோ" என இயம்பிய வள்ளலார், முன்னோர்கள் வலியுறுத்திய உயர்தர்ம நெறிகளை மக்களுக்கு மீண்டும் மிக எளிதாக பாமரனும் புரிந்து கொள்ளும்படி எளிமையாகக் கூறியுள்ளார்கள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற சான்றோர் உரைக்கொப்ப வாழ்ந்து காட்டிய பெருந்தகை நமது வள்ளலார்.

பொருளை கொடுத்த வள்ளல்கள் பலரை நாம் இலக்கியங்களிலே கண்டிருக்கிறோம். நமது இராமலிங்கரோ, அருளை வாரி வாரி வழங்கியதால் அன்பர்களால் "திரு அருள் பிரகாச வள்ளல்" என போற்றி புகழப்பட்டார்.

இராமலிங்க சுவாமிகள் அருளிய அருள் பாடல்களை அவர் காலத்திலேயே அவர் ஆசியோடு 1870 ஆம் ஆண்டு அவர்தம் சீடர் தொழுவூர் வேலாயுத முதலியார் நான்கு பகுதியாக பகுத்து அன்பர்கள் பலர் உதவியோடு "திருவருட்பா" என பெயரமைத்து வெளியிட்டார்கள்.

இராமலிங்க சுவாமிகள் சாதி, மத, இன, பேதம் நீங்கி மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதை மக்களுக்கு எப்போதும் கூறிக்கொண்டே இருந்தார்கள். அதுவே சன்மார்க்கம் என்றார்கள்.

தம் கடைசி காலங்கள் முழுவதும் மேட்டுக் குப்பம் சித்திவளாகத் திரு மாளிகையிலேயே இருந்தார்கள்.

சன்மார்க்க சங்கத்திற்கென தனிக்கொடி ஒன்றும் ஏற்படுத்தி அதன் உண்மையை மக்களுக்கு எடுத்தியம்பினார்கள்.

தெய்வ பாவனையை ஜோதியில் காணும்படி மக்களுக்கு உபதேசித்தார். ஜோதியையே வழிபடவும் பணித்தார்.

எந்தவித பாகுபாடும் காட்டாமல் பசித்த யாராயினும் அவர்கள் புசிக்க ஆகாரம் கொடுப்பதே மக்கள் சன்மார்க்க நெறிப்பட சிறந்த வழியாகும் என வலியுறுத்தினார்.

1874-ஆம் வருடம் ஸ்ரீமுக வருடம் தை மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய நாளில் இரவு 12 மணிக்கு மேட்டுக்குப்பம் சித்திவளாகம் மாளிகையில் புகுந்து அறையை வெளியே தாளிடச் செய்தார்கள். ஜோதியாகி நம் கண்ணுக்கு புலப்படாது எல்லா உயிர்களிடத்தும் புகுந்து விட்டார்கள்.

"இன்னும் இரண்டரை கடிகை உங்களுக்கு புலப்பட மாட்டோம். இந்த உலகத்திலும் பிற உலகங்களிலும் இருப்போம். வெகுவிரைவில் அருட்பெருஞ்ஜோதி இறைவர் வருவார். அப்போது பற்பல அற்புதங்கள் நிகழ்த்துவோம்" என்று வள்ளல் பெருமானே கடைசியாக கூறிவிட்டு அறைக்குள் சென்று மறைந்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அப்போதைய அரசு அதிகாரிகள் அவர் திருக்காப்பிட்ட அறையை திறந்து பார்க்க, அங்கே யாருமில்லை. ஒரே ஒளிமயமாகவே இருந்தது என கூறியிருக்கிறார்கள்.

நமது திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், தாம் மக்களுக்கெல்லாம் சொல்லிய மரணமிலா பெருவாழ்வு நிலையை அடைந்துதாம் மற்றவர்களுக்கு உபதேசித்ததை தாமும் நடந்து காட்டி பேரின்ப நிலை எய்தியதை இதன்மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் அவர் கூற்று அனைத்தும் முழு உண்மை என்பதனையும் இதன்மூலம் யாவரும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

அப்படி எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! ஏற்றுக் கொள்கிறார்கள்! ஏற்றுக்கொள்வார்கள்!! இனி சித்தர்கள் காலம் ஞானம் விளங்குங்காலம். எனவே வள்ளல் காட்டிய வழிநடந்து வாழ்வாங்கு வாழ்வோம் வாரீர்! வாரீர்!

நமது குமரிமாவட்டம் இடலாக்குடியை சார்ந்த செய்குத்தம்பி பாவலர் என்ற இஸ்லாமிய பெரியவர். சதாவதானி என ஆன்றோர்களால் பாராட்டப்பட்டவர், இராமலிங்க சுவாமிகள் அருளியது திருவருட்பாவே என்றும் இறைவன் திருவருளை பரிபூரணமாக பெற்ற ஞானி வள்ளலார் என்றும் பற்பல பொதுக்கூட்டங்களில் பேசி திருவருட்பா பெருமையை பறைசாற்றினார்கள். ஜாதி மதம் இனம் கடந்து வள்ளலார் எல்லோராலும் வணங்கப்படுகிறார் என்பதனை இதன் மூலம் நாம் அறியலாம்.

நமது வள்ளலார் மேல் தீராக் காதல் கொண்டு அவரை மானசீக குருவாக ஏற்று 15 ஆண்டுகளுக்கு மேல் வடலூரில் தங்கி தொண்டுகள் பலபுரிந்தார் நமது திருமுக கிருபானந்த வாரியார் அவர்கள். சத்திய ஞானசபை நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்தியவர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளே.

வள்ளலார் யார் என்பதனையும் அவர் உபதேசித்த மெய்ப்பொருள் உண்மை விளக்கங்களையும் நாங்கள் அறிய காரணமான எங்கள் குருநாதன் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்களையும் என்றென்றும் போற்றி வணங்குகிறோம். எங்களை ஞானபாதைக்கு செல்ல தூண்டிய மாயையால் மறைக்கப்பட்ட எங்கள் கண்களை தங்கள் அருள் செயலினால் திறந்த அருள்மிகு ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்களை நினைவு கூர்வதே எமது முதல் கடமை.

சுவாமிகள் சமாதி ஆகும்முன் அடியேனை அழைத்து குருபீட மேற்க பணித்தார்கள். சரியாக 12 வருடம் கழித்து அடியேன் குரு பீடத்தில் அமர்ந்தேன். குரு இட்டபணி தொடர்கிறது. சற்குரு வள்ளல் பெருமான் உடனிருந்து அருள்பாலிக்கிறார்.

நமது குமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் வடக்கூரில் வள்ளலார் திருஉருவ சிலையை கல்லிலே வடித்து இராமலிங்கசுவாமி நிலையம் என அழகான சிறிய கோவிலை தனி ஒரு ஆளாகவே நின்று பொது மக்கள் ஒத்துழைப்பால் நிர்மாணித்த பெரியவர் தொண்டன் தாணுமாலையன் அவர்களுக்கு நாம் நமது வணக்கத்தை செலுத்துகிறோம். 35 ஆண்டு ஆகிறது.

தமிழக முழுவதும் ஏன், உலகமெங்கும் எண்ணற்ற அன்பர்கள் வள்ளல் பெருமான் புகழ்பாடி அவர் திருவருட்பாவை புத்தகமாக, ஒலிநாடாக்களாக பாடி வெளியிட்டு தொண்டு செய்கிறார்கள். சன்மார்க்க சங்கங்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளது.

தைப்பூச நாளில் லட்சோப லட்சம் மக்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. வள்ளலாரின் அருளாசி பெற்றாலன்றி இப்பணி செய்ய இயலாது. அவர்களுக்கு என்றும் எங்கள் பணிவான வணக்கங்கள் உரித்தாகுக.

வள்ளலாரின் பாடல்கள் அனைத்திற்கும் ஔவை துரைசாமிபிள்ளை அவர்களை உரை எழுதவைத்து அதனை அண்ணாமலை பல்கலைகழகம் மூலம் வெளியிட்டு சன்மார்க்கத்திற்கு பெருந்தொண்டாற்றியிருக்கிறார்கள் பேருதவி புரிந்துள்ளார். அனைவருக்கும் எங்கள் பணிவான வணக்கங்கள்.

இன்னும் ஏராளமான அன்பர்கள் வள்ளல் புகழ்பாடி, பரப்பி நல்நெறிகாட்டி வருகிறார்கள். அனைவருக்கும் எமது வணக்கம் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள்பெற்று மரணமிலா பெருவாழ்வு வாழ என்றும் அருளுமாறு வேண்டுகிறோம். அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிகடன் பட்டுள்ளோம். வாழ்க அவர்கள் தம் பணி வளர்க அவர்கள் தம் புகழ்.

முக்கடலும் சங்கமிக்கும், பாரதத்தின் தென்கோடியாம் கன்னியாகுமரியிலே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் ஆரம்பித்து கடந்த 25 வருடங்களாக வள்ளலார் புகழ்பாடி ஆன்மீகபணி செய்து வருகிறார் சிவ செல்வராஜ்.

1992-ல் கண்மணிமாலை எனும் ஞானநூலை வெளியிட்டார்.

குருவின் சமாதிக்கு பின் 12 வருடம் கழித்து 2002-ல் குருபீடத்தில் அமர்ந்தார். கண்மணி மாலை புதிய பதிப்பாக 2-வது வெளியீடு வள்ளலார் அருளால் வெளிவந்தது.

தமிழகமெங்குமிருந்து அன்பர்கள் தேடி வருகின்றனர். உபதேசமும், தீட்சையும் வள்ளல் அருளால் வழங்கி வருகிறார். தொடர்ந்து கண்மணி மாலை, அருள்மணி மாலை ஸ்ரீ பகவதி அந்தாதி, அருட்பெருஞ்ஜோதி அந்தாதி சன்மார்க்க தெய்வம், சற்குரு கோவிந்த சுவாமிகள், அஷ்டமணி மாலை, செல்வமே சீர்தாருமே, அன்பு உதயமலர், ஜோதிமணிமாலை, செந்திலாண்டவன் பாமாலை, ஐக்கூ ஜோதி அந்தாதி ஆக 12 நூல்கள் வெளியிட்டுள்ளார்.

**“வள்ளலார் விழியே”** எனும் இந்நூல் 13-வது நூல்

அனைத்தும் வள்ளலார் வழியில் ஆத்மஞானம் போதிக்கும் உயர்ந்த ஞானப் பாடல்கள். வழி வழியாக நம் முன்னோர் உரைத்த ஞான ரகசியங்கள் இந்நூற்கள் அனைத்திலும் வள்ளலார் அருளால் விழி வழியாக உபதேசமும் தீட்சையும் வழங்கப்பட்டுள்ளது. சிவ செல்வராஜ் மூலமாக வள்ளல் பெருமான் அருளே ஒப்பற்ற இச்செயல் புரிகிறது!

வாருங்கள் உணருங்கள்
மரணமிலா பெருவாழ்வு அடையலாம்!

மக்கள் எல்லோரும் எல்லா நலனும் பெற்று பல்லாண்டு வாழ, மரணமிலா பெருவாழ்வு நிலையடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உலகில் தற்போது இருக்கின்ற அனைத்து மதங்களிலும் இறைவனைப் பற்றி குறிப்பிடும்போது வேறு எந்தவித பாகுபாடும் இன்றி அனைவரும் "ஒளி" ஒன்றையே குறிப்பிடுகிறார்கள். இது யாவரும் மறுக்க முடியாத உண்மை இந்த ஒரு உண்மையை வைத்து உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இதைத்தான் நமது திருவருட்பிரகாச வள்ளலார், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே சன்மார்க்கம் என்றும் இனி வருங்காலம் சன்மார்க்க காலம் என்றும் உலகத்தில் எல்லா மதத்தவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒளியையே - அருட்பெருஞ் ஜோதியையே - தனிபெருங் கருணையையே எல்லோரும் வழிபட வேண்டும் என்றும் கூறினார்கள்.

ஜாதி மன, இன இன்னும் வேறு எந்த பாகுபாடும் இன்றி உலகர் அனைவரும் எல்லா உயிர்களும் "நாம் அனைவரும் ஆண்டவனின் குழந்தைகளே" என ஒன்றுபட வேண்டும். என்பதற்காகவே வள்ளலார் அல்லும் பகலும் இடைவிடாது பாடுபட்டார். அவர்தம் கனவு நனவாகும் நாள் வெகுவிரைவில் வரவிருக்கிறது.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!!

ஆன்மநேய ஒருமைப்பாடு உடையவராக நாம் அனைவரும் விளங்க வேண்டும் என்பதற்காக சதாகாலமும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் மன்றாடிய பாமரன் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 183-வது பிறந்த தினவிழா கொண்டாடும் இந்நேரத்திலே அவர் நமக்கு உபதேசித்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தை பசித்திருந்து - தனித்திருந்து - விழித்திருந்து கடைபிடிப்போமானால் அதுவே அன்னாருக்கு நாம் செய்யும் மிகப்பெரிய தொண்டாகும்.வணக்கமாகும். இதைத்தான் வள்ளல் பெருமானும் விரும்பினார்கள்.

ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப நாம் அறவழி நின்று உலகம் முழுவதும் சன்மார்க்கம் தழைக்க பாடுபடுவோமானால் இராமலிங்க சுவாமிகள் நம்முள் இருந்து அகமிக மகிழ்ந்து நாமும் மரணமிலா பெருவாழ்வு வாழ துணை நிற்பார்கள். இது உறுதி! சத்தியம்!! முற்றிலும் உண்மை!!

ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட் பெருஞ் ஜோதிஎன் உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்தியச் சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே

- திருவருட்பா - 5453
- **இராமலிங்க சுவாமிகள்**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக!!
ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்!!!

## திருவருட்பா மகிமை

பத்திவரும் பழவினைகள் பறந்தோடும்
மூலமலப் பகுதி மாயும்
புத்திவரும் புலைகொலைகள் புறம்போகும்
ஆனந்தம் பொங்கும் சாந்த
முக்திவரும் அழியாநன் மோக்கமுறும்
முதுகடல் சூழுலகில் எல்லாச்
சித்திவரும் இராமலிங்க தேசிகன்தன்
அருட்பாவைச் சிந்திப் போர்க்கே

*****

# வள்ளலார் விழியே

| | | | |
|---|---|---|---|
| வள்ளலே | எம்மை | வாழ்விக்க | வந்தவரே |
| துள்ளலை | விட்டேன் | துன்பத்தை | மாற்றுவாயே |
| எள்ளிலே | எண்ணையாய் | என்னுள் | இருப்பவரே |
| தள்ளலை | எங்களை | தடுத்தாட் | கொள்வாயே |
| | | | |
| துன்பத்தால் | துடிக்கிறேன் | துயரமே | இதுவரை |
| இன்பத்தால் | மேன்மைபெற | இணையடி | தாருமே |
| அன்பற்றால் | என்னாவேன் | அரவணைத்து | காத்திடு |
| நன்பற்றாய் | உன்னையே | நான்பற்றி | இருக்கிறேனே |
| | | | |
| ஏக்கம் | தீர்ப்பாய் | எங்குரு | இராமலிங்கமே |
| தாக்கம் | அதிகமே | தாழ்ந்திடாது | தடுப்பாயே |
| ஊக்கம் | தந்திடு | ஊரில் | வாழ்ந்திடவே |
| ஆக்கம் | வெளிவர | ஆவன | செய்வாயே |
| | | | |
| திருவருட்பிரகாச | வள்ளலே | திகழும் | ஜோதியானவரே |
| குருவருள்சற்குரு | உன்னருள் | குறையாது | எந்நாளும் கிட்டணுமே |
| திருவருட்பாமாலை | சூட்டினாயே | திருவாய்மலர்ந்து | அருள்பவரே |
| திருவருள் | பூரணமாய் | கிட்டிட திருஷ்டி | எமக்கு தருவாயே |
| | | | |
| இராமலிங்க | பெருமானே | இராமசாமி | தேசிகனே |
| இராமலிங்கு | ஆனாலோ | இராகதுவே | சாதிகளே |
| இராப்பகல் | இல்லா | இடந்தனில் | இருக்கவே |
| இராகம்பாடி | பாமாலை | இடுகின்றேன் | உங்களுக்கே |
| | | | |
| கண்ணும் | மணியும் | கருதியிருக்க | சொன்னவரே |
| எண்ணும் | எழுத்தும் | எல்லாமுமாய் | இருப்பவரே |
| பண்ணும் | பாட்டும் | பக்தனுக்கு | தந்தவரே |
| நண்ணும் | வாழ்வை | நம்மவருக்கு | தந்தருளே |
| | | | |
| அருட்பாதந்த | இராமலிங்கர் | அகவல்படிக்க | வந்தேனே |
| பொருட் செறிவு | குருநாதர் | புரியவைத்தார் | கண்ணியனானேன் |
| மருள்நீக்கி | மவுனம்தந்த | மாமனிதர் | வழிநடப்போமே |
| அருள்தரும் | வள்ளலாம் | அருட்பிரகாசரை | மறவாதே |
| | | | |
| சத்திய | ஞானசபை | தன்னுள்கண்ட | சுத்தஞானி |
| சத்திய | சமரசசுத்த | சன்மார்க்கம் | தந்தஞானி |
| சத்திய | வேதம் திருஅருட்பா | தந்தவள்ளல் | தத்துவஞானி |
| சத்திய | மிதுதான்என | சாகாநிலைபெற்ற | வித்தகஞானி |

| | | | |
|---|---|---|---|
| என்னைபாடாதே | எல்லாம்வல்ல | இறைவனையே | பாடுகஎன்றவரே |
| உன்னைபாடாது | சற்குருவாம் | உன்அருளை | நாடாதுநான் |
| என்னபாடுவது | எதைசாதிப்பது | திருஅருட்பிர | காசவள்ளலே |
| உன்னை என்னை | படைத்தவனை | காணஉமது | அருள்தாருமே |
| | | | |
| முன்னை | வினையின் | முடிச்சவிழ்க்க | அருள்வாய் |
| என்னை | எனக்கு | அறிவித்தருள் | புரிவாய் |
| பின்னை | ஏனென்னை | படைத்தாயிப் | புவியில் |
| உன்னை | எனக்கு | காட்டியே தீர | வேண்டும் |
| | | | |
| விடமாட்டேன் | கண்ணான | கண்ணே | உன்னை |
| படமாட்டேன் | துன்பம் | மெய்ஞான | விளக்கே |
| தொடமாட்டேன் | வேறொன்றை | அருள்வாய் | ஜோதியே |
| ஓடமாட்டேன் | ஓயமாட்டேன் | உன்னருள் | கிட்டும்வரை |
| | | | |
| பித்தனாய் | பிதற்றித் | திரியவைத்தது | நீதானே |
| சித்தனை | உன்மத்தனை | காட்டியருள் | ஜோதியே |
| எத்தனை | காலந்தான் | இன்னுமெனை | சோதிப்பாயோ |
| அத்தனாய் | ஆதரித்து | அருள்இராமலிங்க | சுவாமிகளே |
| | | | |
| முன்னம் | எனக்கு | உரைத்தவர் | யாருமிலை |
| பின்னும் | என்னை | போற்றுவார் | யாருமிலை |
| உன்னும் | போதும் | உறங்கும் | போதும் |
| மன்னிய | கருணையே | மங்கள | ஜோதியே |
| | | | |
| என்றும் | உந்தன் | பிள்ளையாய் | நானிருக்கவே |
| என்றும் | சோதனை | மேல்சோதனை | தருவதேனோ |
| என்றும் | உந்தன் | அருள்மழையில் | நனையவிட்டால் |
| என்றும் | சாதனை | உன்னால்படைத்து | மகிழ்வேனே |
| | | | |
| சாத்திரமென | திருமந்திரத்தை | தரணிக்கு | காட்டியவா |
| தோத்திரமென | திருவாசகத்தை | தொட்டு | காட்டியவா |
| பாத்திரமென | திருவருட்பாவை | பகுத்து | காட்டியவா |
| நேத்திரமென | நின்றிலங்கும் | நிர்மலனே | வள்ளலே |
| | | | |
| பாத்திரத்தின் | தன்மையும் | பாதிறனும் | பாவியேன் |
| பார்த்திராத | காரணம் | நீக்கியருளி | திருவருட்பா |
| பார்த்துள் | உருகிட | பவசாகரம் | கடந்திடவே |
| பார்த்த சாரதி | பண்புரையே | அடியேன் | நலமாயிடவே |

சிந்தை தெளிய சித்தர்நூலை பார்ப்பாயே
முந்தை வினையின் மூலமதனை அறிவாயே
எந்தை இருப்பது கண்தானே உணர்ந்து நீ
கந்தை அகற்றினால் காணலாமே கந்தனை

மாணிக்க வாசகமாய் மலர்ந்தது ஓராயிரம்
ஊணிக்க கடத்தில்மூலன் முகந்தது மூவாயிரம்
காணிக்க இராமலிங்கன் அருளியது ஆறாயிரம்
பாணிக்கி ரகம்பரமனோடு என்னில் பற்றாயிரும்

திருவருட் பிரகாச வள்ளலே இராமலிங்கமே
உருவை காட்டாது ஒளியாக்கி வாழ்பவரே
இருவினை போக்கும் காருண்யம் கற்பித்தவரே
கருவழி புகாமல் காத்தருள் எம்மையே

இரக்கமே உருவான இனிய வள்ளலாரே
சிறக்கவோ வாழ்க்கை சிவமய மாகிடவோ
உறக்கமே எல்லாமே உதவிட பணிந்தேனே
உரக்கவே சொல்வேன் உனையன்றி காப்பார்யார்

உன்னை நம்பியே உலா வருகிறேன்
என்னை காப்பாய் எங்குல தெய்வமே
பின்னை வழியில்லை பிறந்து விட்டேனே
அன்னை அப்பனும் அருட்பிர காசரே நீயே

பாசபந்த மானஉலகில் பற்றுநான் வைத்திடாமல்
மோசமான ஆசையினால் நீசனாய்நான் போயிடாமல்
ஏசுமிந்த உலகோர் தூற்றுமாறு வைத்திடாமல்
நேசமான உறவுஉன் தன்னையேநான் பற்றிடச்செய்

நான்பிறந்த நேரமதை நானறிய நாலிரண்டாண்டு
நான்பிறந்து நன்னெறி வழிநடக்க நாலாறாண்டு
நான்பிறந்து அறிந்தது நல்லோரின் நாலும் இரண்டும்
நான்பிறந்தது ஏன்என்று நானறியச்செய் என்ஆண்டே

கொஞ்ச நாள்தான் குவலயத்தில் அல்லலுற்றேன்
மிஞ்சிய வல்லவரை ஆலயத்தில் பற்றிவிட்டேன்
எஞ்சிய நாட்களில் எல்லையில்லா ஆனந்தந்தா
கெஞ்சும் என்மீது கருணைகொள் எங்குமுளோனே

| | | | |
|---|---|---|---|
| என்னபாவம் | செய்தேனோ | இப்பிறவி | யான்பெற்றிட |
| என்னபாவம் | செய்தாலும் | இப்பிறவி | யோடேமுடிந்திட |
| என்னபாவம் | நான்கொள்ள | வேண்டுமென | நீஅறிவித்திடு |
| என்னபாவம் | இதுஎன | வியந்திட | அருள்நீ |

| | | | |
|---|---|---|---|
| என்னபுண்ணி | யம்செய்தேனோ | உந்தன் | பேர்சொல்லிட |
| என்னபுண்ணி | யம்செய்தேனோ | உந்தன் | புகழ்பாடிட |
| என்னபுண்ணி | யம்செய்தேனோ | உந்தன் | அருள்பெற |
| என்னபுண்ணி | யம்செய்தேனோ | உந்தன் | செல்வமாயிட |

| | | | |
|---|---|---|---|
| பக்தர்கள் | பலரும் | பார்த்து | மகிழ்ந்திடவே |
| பக்தர்கள் | பலரை | சேர்த்து | உருவாக்கிய |
| பக்தர்கள் | பலரால் | உருவான | ஞானசபையை |
| பக்தர்கள் | பலரும் | போற்றிட | அருள்ஜோதியே |

| | | | |
|---|---|---|---|
| பொல்லாத | இவ்வுலகில் | என்னை | படுத்தியதுபோதும் |
| நில்லாத | என்துன்பம் | நீக்கி | என்னைகாப்பாய் |
| கல்லாத | எனக்கும் | கடைக்கண் | காட்டுவாய் |
| எல்லாமும் | நீயேஎன | இருக்கும் | எனைகாப்பாய் |

| | | | |
|---|---|---|---|
| எத்தனைநாள் | அல்லலுற்றேன் | எங்குருநாதன் | பாதந்தேடி |
| சித்தனைநான் | தெரியலுற்றேன் | இராமசாமிதேசிகன் | பாதம்நாடி |
| அத்தனைநான் | அறியவேண்டும் | அருட்பெருஞ்ஜோதி | அருள்வாய் |
| எத்தநைாள் | இன்னும் நான் | அல்லலுற | எண்ணுகிறாய்நீ |

| | | | |
|---|---|---|---|
| உண்ணுவதும் | உறங்குவதுமாய் | போகின்ற | தென்வாழ்வு |
| பண்ணுவது | பாவந்தான் | பரிதவிக்கின்றது | என்உளந்தான் |
| நண்ணுவது | உன்பாதந்தான் | கன்னியாகுமரியில் | தவிக்கின்றேன் |
| கண்ணும் | என்கருத்தும்நீயே | யானபின்னும் | கலக்கம்ஏனோ |

| | | | |
|---|---|---|---|
| சீவகாருண்யமே | மோட்சவீட்டின் | திறவுகோல் | எனஉரைத்தவா |
| சீவகாருண்யம் | என்னுள்வளர | உன்னருள்தா | வள்ளலே |
| சீவகாருண்யத்தின் | மேன்மைபாரோர் | அறியசெய்ய | வல்லமைதா |
| சீவகாருண்ய | சீலர்கள்சித்தி | யெலாம்பெற | சீக்கிரமருள் |

| | | | |
|---|---|---|---|
| வள்ளல் | உனைகாண | துடிக்கிறேனே | நீ அறியாயோ |
| எள்ளல் | பலகாலும் | புரிந்தேனே | நீ அறிவாயே |
| துள்ளல் | எலாம்விட்டு | சுகம்பலபெற்று | வாழநீஅருள் |
| தள்ளல் | அழகல்ல நீ | என்னைதயவுடன் | காத்துஅருளே |

அம்மையப்பன் ஆதரிப்பில் இருந்தபோது ஏதுமறியேன்
அம்மையப்பன் சொற்கேளாமல் சுற்றியபோது அடிபட்டேன்
அம்மையப்பன் நீயென்று சற்குருயுன்னை பற்றினேன்
அம்மையப்பன் யாரென காட்டியருள் வள்ளலே

எப்படித்தான் என்மனம் புகுந்தாயோ வள்ளலே
அப்படியிப்படி அலையுமனம் அமைதிபெற அருளாயோ
எப்படியாலும் உன் சரண கமலாலயம் எனக்கருள்
அப்படியே என்றென்றும் காத்தருள் புரிகவே

தங்கம் வேண்டுமென என்மனம் கூறியதுண்டு
தங்கமே யனையார்களுடன் சத்சங்கம் நீதந்ததுண்டு
தங்கம் நாமமுடையாள் மனையாளாய் வாய்த்ததுண்டு
தங்கம் போல்மேனி மனம்மாற உன்அருளுண்டு

இல்லையென கூறாதுவாரி அருள்கொடுத்த வள்ளலார்
தில்லையாடிய தலைவன்தன் சீர்சான்ற செல்லப்பிள்ளை
எல்லையில்லா வான்புகழ் வள்ளலார் சரிதந்தனை
தொல்லைபிறவி அறகேட்பீர் படிப்பீர் உய்வீரே

என்னைநான் ஏதுமறியா வேளையில் யௌவனத்தில்
என்னை நீ தடுத்தாட்க் கொண்டதேனோ வள்ளலே
முன்னைவினை அனைத்தும் வேரறுக்க செய்திடு நீ
என்னையுன் செல்வமாய் ஏற்றுக்கொள் பூரணனே

அன்றே எந்தன் எல்லாமும் நீயேயானாய்
நன்றே எல்லாம் நன்மையே எனமகிழ்ந்தேன்
கன்றே நான்யுன் அடைக்கலமே கருணாமூர்த்தியே
இன்றே உந்தன் அருட்கடலில் எனைஆழ்த்து

எத்தாலும் அழியா உடல்பெற்ற வள்ளலே
எத்தாலும் உனைமறவா நிலைபெற அருளுகவே
பித்தாலும் பேதமைபெறு மாந்தர்நிலை மாறவே
சித்தாலும் சத்தாலும் ஆனந்தம் அருளுகவே

மீண்டும் என்னை காத்த மோனமே சற்குருவே வள்ளலாரே
யாண்டும் உன்னை வேண்டி யாசிக்கும் எம்மைகாப்பீரே
தாண்டும் நிலையை உயர்த்தி தற்காத்துஎன்றும் அருள்வீரே
வேண்டும் அருளை பொருளை விருப்புடன் தந்தே மகிழ்வீரே

எத்தனை தவறுநான் செய்தாலும் என்றும் காக்கும்தெய்வமே
அத்தனை பேருக்கும் உதவியே ஆதாரமாய் இருக்கஅருள்வாயே
சித்தனை போற்றும் உன்னத சிந்தனை வந்திட செய்வாயே
அத்தனை அகத்தில் காணவே அனைவருக்கு மருளை தருவாயே

மருதூர் மன்னவா மரணம் வென்றவா
தொழுவூர் வேலாயுதம் தொழுதிட நின்றவா
வடலூர் கண்டவா வருவிக்க வந்தவா
கருவூர் போகாது காப்பாய் வள்ளலே

இராமலிங்கம் வழி நடந்தால்
இராப்பகல் அற்று போகுமே
இராமலிங்கம் வழி காட்ட
இராகாதிகள் அற்று போகுதே
அராமியன் என வாழாது
அருந்தவன் ஆக முயலுமே
இராமிலன் எனக்கு நீதானே
இறைவா ஆக்கி அருளுமே

துறைமுகம் கொண்ட சென்னையிலே
அறிமுகம் ஆகவே வந்தேனே
துறையாவது முகத்திலே கண்கள்தானே
அறிவாயோ முகம்மது கண்டதுவே
துறையறி விளக்கம் பார்த்தாலே
அறிவது தெளியும் தன்னுள்ளே
துறைமுகம் ஒளியை தந்தாலே
அறியலாம் உள்ளிருக்கும் இறையை

வள்ளல் உந்தன் புகழ் பாடிட
வந்தேனே வளமான குமரிக்கே
துள்ளல் இனிஇல்லை உன் திருவடி
துணையென வந்தேனே உன்னருகே
எள்ளல் இல்லாது காத்திடுவாய்
எம்மை வாழ்வாங்கு வாழவையே
தள்ளல் வேண்டாம் சற்குருவே
தடுத்தாட் கொள்ளல் வேண்டுமே

என்துன்பம் நீக்கிட உன்புகழ்
எந்நாளும் பாடிட அருள்வாயே
என்இன்பம் நீயானாய் மகிழ்ந்தே
எந்நாளும் இருந்திட வருவாயே

என் அன்பர் எல்லோரும் வாழ்வாங்கு
எந்நாளும் வாழ்ந்திட கருணைபுரியே
என்சங்கம் சிறந்தோங்க ஒளிதந்து
என்நாளும் உருவாகி இருப்பாயே

நான் மறந்தாலும் எனைமறவா
நற்கருணை தெய்வமே வள்ளலாரே
பான் மறந்த குளவிபோல
பரிதவிக்க விடுதல் உமக்கழகோ
ஏன் மறந்தேன் இருவினையை
எனைவிட்டு நீக்காத காரணத்தாலே
வான் பொய்க்கினும் பொய்க்காத
வள்ளலே உன்னருளை நானறிவேனே

நீருண்டு எனஉறுதி மிகக் கொண்டு
நிற்கின்ற என்போல்வார் பலருண்டு
யாருண்டு உன்போல் நிலை கொண்டு
யாவர்க்கும் இரங்குகின்ற மனங்கொண்டு
ஊருண்டு பேருண்டு உறவுண்டு
உற்றாரும் பெற்றாரும் உண்டெனக்கே
பாருண்டு என்றெனக்கு பரிவுகொண்டு
பக்குவமாய் அருள்தந்து ஆட்கொண்டாயே

தூக்கிப்பிடி அன்பரை நல்லோரை
துவளாமல் பணிசெயும் பண்பாளரை
பார்த்துப்படி நண்பா அருட்பாவை
பாத்திரமாம் கண்மணியை கருதியே
சேர்த்துப்பிடி சந்திர சூரியனை
சேரலாமே அக்கினியை முயன்றாலே
சார்த்துதிரு வடியில் மனதை
சலனம் கொள்ளாதே உலகிலே

தலைவனாய் சன்மார்க்கம் தழைக்க வந்தவரே
அலைபாயும் என்மனதை அமைதியுற செய்தவரே
புலையனாய் திரிந்தவனை புனிதனாக்கிய புண்ணியரே
நிலையாய் உம்நிழலில் நின்றிட அருள்வாயே

அருபசக்தி கொண்ட ஒளிரூபமே
அவனியில் வலம் வருவோனே
குருபக்தி கொண்டு நின்றோமே
கும்பிட்டு உன்னடி சரணானோமே

தருமுக்தி அன்பினால் யாம்பெறவே
தகுதியினை தந்தே ஆள்வாயே
உருசக்தி வடிவாய் உலகுய்ய
உழைக்கும் வள்ளலே சரணமே

குருவருள் பெறவே வருகிறோம்
குவலயம் போற்றும் வள்ளலாரே
திருவருள் உம்மால் யாம்பெறவே
திருமுகம் காட்டி அருள்வாயே
கருவருள் தந்ததாலே இன்றுனை
காணவே வருகிறோம் வடலூருக்கே
உருஅருள் மயமாகிடவே உத்தமரே
உன்பாதம் சரணானோம் காப்பாயே

எட்டிரண்டு எண்ணியே பயணித்தால்
எட்டாத கனியை பறித்திடலாம்
மட்டில்லா மகிழ்வுடன் மனதில்
மலர்ந்தது ஒரு மலரதுவே
எட்டுத்திக்கும் புகழ் பரப்பும்
எங்கள் வள்ளலார் தந்ததுவே
எட்டிபார்த்து திட்டி வாசலை
எங்களுக்கு திறந்து ஆளுமே

சற்குருவே இராமலிங்கமே சாற்றினேன் தமிழ்மாலை
நற்கருணை தெய்வமே நானிலம் காத்திடவே
கற்குநெறி காட்டுவித்து கடவுள்நிலை அருள்வாயே
பற்பலரும் ஒன்றாகியே பண்புடனே வாழவே

ஐப்பசி ஒன்றிலே ஆனந்த காட்சியால்
ஐயம் தீர்த்து அடைக்கலம் தந்தாயே
மெய்ப்பசி கொண்டு திரிந்த என்தனை
மெய்யுரு காட்டி மேன்மை தந்தாயே
வாய்பேசி வாதம் புரியும் அன்பரை
வசமாக மாற்றிட அருள் தருவாயே
மெய்பேசி உணர்த்தி மேன்மை பெற்றிட
மெய்யின்ப நிலையும் எமக்கு தருவாயே

குருவாய் வந்தெனை குணமாக்கிய தேசிகனே
அருவாய் என்னுளே அன்பினால் இருப்பவனே
உருவாய் ஜோதியும் உன்னாலே பெற்றேனே
தருவாய் வல்லமை தந்தெமை காப்பவனே

கன்னியா குமரியிலே உனக்கொரு கோட்டம்
கவின்மிகு காட்சியாய் அமைய வேண்டுமே
உன்னிப்பாக கவனித்த பேர்க்கே வள்ளலாரின்
உன்னத நிலைமை தெளிவாகும் வந்திடுவாரே
நன்னிலை இதுவென நானிலத்தோர் வந்துன்
நாமம் கூறிநன் மார்க்கம் காண்பாரே
தன்னிதய தாமரை இருக்கும் தலைவன்
திருவடி அறிந்து உணர்ந்து வாழ்வாரே

முக்கடலும் சங்கமிக்கும் முத்தமிழும் மணக்கும்
முத்தர்மனம் தித்திக்க குமரிகடலருகே நிற்போனே
எக்காலமும் உன்நினைவே வெள்ளாடை துறவியே
என்மனம் பிறளாது காத்தருள் வள்ளலே
முக்காலமும் உணர்ந்தவன் நீயன்றோ இராமலிங்கமே
முனிபுங்கவா உன்பெருமை எடுத்துரைக்க இயலாதே
இக்கடலாம் பிறவிபிணி நீக்கிஎமை காத்திடவே
இன்முகம் காட்டியருள் ஈடில்லா சற்குருவே

தினம்நான் செத்துப் பிழைக்கும் நிலையை
திருவடி சேர்ந்த பின்னும் தருகிறாயே
இனம்நான் உந்தன் அருள்பெற என்ன
இன்னல் அனுபவிக்க வேண்டுமோ அறியேனே
மனம்தான் எப்போதும் மிரளுதே வள்ளலே
மலரடி மறவாத பேரின்பம் அருளாயோ
தனம்தான் இல்லை தந்தெமை காப்பாயே
தன்மானம் காத்து தாழ்வுறாது வாழவை

| | | | |
|---|---|---|---|
| வள்ளல் | அருளால் | வந்தான் | சுயம்ஜோதி |
| தள்ளல் | வேண்டாம் | தங்கமே | தடுத்தாட்க் |
| கொள்ளல் | வேண்டும் | கொள்கை | கொடியோடே |
| எள்ளல் | இல்லாது | எங்களை | காப்பாயே |

| | | | |
|---|---|---|---|
| உன்னால் | வாழுகிறேன் | உத்தமனே | அருள்வாயே |
| என்னால் | ஆவதெல்லாம் | என்குருவே | உன்அருளாலே |
| முன்னால் | நீவந்தே | முக்தியின்பம் | தருவாயே |
| பின்னால் | பேரின்பம் | பிறவாநிலை | நல்குவாயே |

| | | | |
|---|---|---|---|
| வள்ளலார் | வாய்மொழி | திருஅருட்பா | கேட்டுணர்ந்து |
| நல்லஆரல் | வாய்மொழி | தொண்டன் | தாணுமலையன் |
| உள்ளத்தில் | உருவான | இராமலிங்கசுவாமி | நிலையத்தில் |
| நல்லஅருள் | பெறலாம் | உலகோரே | வாரீர் |

| | | | |
|---|---|---|---|
| உன்னைத்தானே | எப்போதும் | எண்ணுகிறேன் | வள்ளலே |
| என்னைத்தானே | நான்உணர | அருள்தாரும் | சற்குருவே |
| தன்னைத்தானே | அறிந்தபின் | அம்மையப்பன் | அருள்வானே |
| பின்னைத்தானே | பாருலகில் | சிரஞ்சீவியாய் | நிலைப்பேனே |
| | | | |
| என்றும் | என்னை | காத்திடும் | ஏந்தலே |
| மன்றுள் | ஆடும் | மாமருந்தே | ஜோதியே |
| வந்துன் | அருள் | தந்தெமை | காருமே |
| அன்றுன் | கருணை | குருவாய் | வந்ததே |
| | | | |
| குருபீடம் | அமர்த்திய | குணப்பெருங் | குன்றமே |
| குருநீதானே | எந்தன் | கண்வழி | நின்றாயே |
| அருமையான | ஞானம் | அனைவரும் | பெறவே |
| உருவாக | வேண்டுமே | உன்சபை | குமரியிலே |
| | | | |
| வாழையடி | வாழையாய் | வந்த | வள்ளலே |
| தாளைஅறி | வாலறிய | திருவடி | தந்தவரே |
| ஊழைநான் | வென்றிட | உன்னருள் | வேண்டுமே |
| நாளைஎன் | றிடாதின்றே | நல்லாக்கி | வையே |
| | | | |
| கனவாக | எண்ணினேன் | கண்முன் | வந்தயுனை |
| கனிவாக | பார்த்துயேன் | கருணை | புரியலை |
| இனிதான | சன்மார்க்கம் | இப்புவி | ஓங்கிட |
| எனைதான் | குருபீடம் | ஏற்றி | வைத்தாயோ |
| | | | |
| இருந்து | சாதித்திட | இன்னருள் | தருகவே |
| மருந்து | ஜோதியே | மாநிலம் | அறியவே |
| இருந்து | குருவாய் | இணையடி | சூட்டிட |
| அருந்து | என்றுதா | அமுதமே | வள்ளலே |
| | | | |
| தென்கோடி | முனையிலே | தெளிந்த | ஞானியாய் |
| விண்ணோர் | வியப்ப | வலம் | வருவோனே |
| மண்ணோர் | வாழவே | மரணத்தை | வென்றவரே |
| தண்ணோர் | ஒளியை | தந்தவரே | வள்ளலே |
| | | | |
| பணிந்தேன் | திருவடி | பக்தனை | காப்பவரே |
| அணிந்தேன் | பாமாலை | அருட்பிரகாச | வள்ளலே |
| துணிந்தேன் | உரைக்க | துணைநீ | இருப்பதால் |
| கனிந்தேன் | உன்னருள் | கண்ணாலே | காப்பாயே |

# வள்ளலார் காட்டிய வழியில் விழி வழியே தீட்சை வழங்கும் ஞான சற்குரு - ஸ்ரீலஸ்ரீ




## சிவ செல்வராஜ்




## தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை



ஞான சற்குரு சிவசெல்வராஜ்



ஞான சற்குரு சிவ அரவிந்த்ராஜ்



ஞான சற்குரு சிவ விமல்ராஜ்

நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 233853